உ

சிவமயம்



யாழ்ப்பாணம்

தெல்லியூர் முல்லாத்தனை வாசர்

அமரர்

# மயில்வாகனம் சிவசுப்பிரமணியம்

அவர்களின்

# நினைவு மலர்

**28 - 8 - 1980**

குகன் அச்சகம், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் — வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். — தமிழ் மறை



**அமரர் மயில்வாகனம் சிவசுப்பிரமணியம்**

அமரத்துவ திதி : தமிழ் ஆனி மீ — சதுர்த்தி அமாவாசை

தோற்றம் : 8 - 2 - 1944

மறைவு : 11 - 7 - 1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
: சுன்னுகம்,
இலங்கை.

# அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள் வாழ்க்கை வரலாறு

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

சக்தி வழிபாட்டிற்கும், கல்விப் பணிக்கும் அரசியல் மேம்பாட்டிற்கும் சிறப்பிடமாகத் திகழ்வது தெல்லிமா நகரமாகும். ஆங்கு வீரன், என யாவராலும் பாராட்டப் பெறும் வேளான் குல திலகன் திரு. அப்பாக்குட்டி மயில்வாகனத்திற்கும் அவர் தம் அன்பு மனையாள் முத்துத்தம்பி மகள் பூரணத்திற்கும் 1944ஆம் ஆண்டு மாசித் திங்கள் 8ஆம் நாள் சிவசுப்பிரமணியம் அருமைச் செல்வனுகத் தோற்றினர். இவரை எல்லோரும் மணியம் எனச் செல்லமாக அழைப்பர். இவருக்கு மகேந்திரன், தெய்வேந்திரன், ஸ்ரீ காந்தன் என்னும் மூன்று ஆண் சகோதரர்களும், விசாகதேவி என்னும் அருமைத் தங்கையும் உடன் பிறப்பாளராய் வாய்க்கப்பெற்றனர்.

மிக இளமைக் காலத்திலே தனது அருமைத் தாயாரை இழந்த மணியம் தந்தையினதும், பேத்தியாரினதும் அரவணைப்பில் வளர்ந்தார். தன் அன்புச் சகோதரர் களுக்கு ஓர் வழித் துணையாக இருந்தார். இவர் இறைபக்தி, சுற்றம் தழுவுதல், விருந்தோம்புதல், பிறர்க்குதவுதல் இவரின் ஒப்பற்ற பண்புகளாகும்.

யூனியன் கல்லூரியில் கல்வி பயிலும் காலத்தே சிறந்த விளையாட்டு வீரனுகவும் பொதுநலத் தொண்டனுகவும் விளங்கினுர்.

கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்து தெல்லிப்பழை கிராம சபை மின்சாரப் பகுதியில் கடமை யாற்றலானுர். இப் பணி மூலம் பலருடன் இணைந்து தெல்லிப்பழைக் கிராமத்தை ஒளி பெறச் செய்தார். அத்துடன் தன் தொழில் நுட்பத் திறனுல் பல்லோர் தம் இல்லங்களை ஒளிமயமாக்கினுர். மொழிப்பற்று இனப்பற்று கொண்ட மணியம் எதனையும் அஞ்சா நெஞ்சுடன் ஆணித்தரமாக எடுத்துரைப்பார். நினைத்ததை முடிப்பவனுக எல்லோர் தம் உள்ளங்களையும் அன்பால் கவர்பவனுக - சக்தி தாசனுக விளங்கினுர்.

எல்லோர்க்கும் இனியனுன மணியம் இல்லற வாழ்வில் புகவிரும்பினுர். அவ்விருப்பத்தால் தம்பிப்பிள்ளை புதல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசா அவர்களதும் வைத்திலிங்கம் புதல்வி தெய்வநாயகி அவர்களதும் மூத்த புதல்வி செல்வி மனோரஞ்சித மலரை 4-8-1970ஆம் ஆண்டில் திருமணம் புரிந்தார். இதன் பேருக தவராசா, யோகராசா, சிவராசா, சுந்தரலிங்கம், வசந்தராசன், என்போரை மைத்துனராகவும்; ராணி, ரூபி, வசந்தி, யோகினி என்பவர்களை மைத்துனிகளாகவும் வாய்க்கப்பெற்றார்.

வள்ளுவன் வகுத்த நெறிகளுக்கமைய இல்லறமாம் நல்லறத்தில் இனிது ஈடுபட்டுவருங்கால் சித்திரா, கங்கேஜி என்னும் பெண் குழந்தைகளும்; சுரேந்திரா, கஜேந்திரா என்னும் ஆண் குழந்தைகளும் தோன்றினர். மழலை இன்பத்தில் திளைத்து மகிழ்ந்து அன்பு மனையாளின் இன்ப உரையில் மிதந்து இல்லறத்தின் சோலையில் இனிது நீண்ட காலம் உலாவ விதி அவரை விட்டுவிடவில்லை. ஐயகோ விதியை யார்க்கு எடுத்துரைப்போம்.

சிலம்புச் செல்வன் கோவலனை மதுரைக்கு வரவழைத்த விதி மணியத்தையும் தெல்லியூரில் இருந்து 1979ஆம் ஆண்டு பதவியுயர்வுடன் நிந்தவூர் கிராமசபைக்கு வரவழைத்து யாவரும் மெச்சத் தன் கடைமைகளை செய்தார். இவ்வாண்டு கதிர்காம வேலன் பவனியில் கலந்த கொள்ள ஆசை கொண்டார். அதற்கு முன்கூற்றுவன் கொடுமையால் வடிவேலன் திருவடியில் இரண்டறக் கலந்தார். 11-7-1980ஆம் நாள் நம் துன்ப நாள், சோகநாள் அன்றுதான் மணியம் அகால மரணமுற்று ஆத்மா சாந்தியடைந்த நாள்.

மணியத்தின் வாழ்வில் பொது நலத்தை பார்க்கின்றோம். '' எங்களை தூக்கிச் சுமப்பான் '' என எண்ணிய வயது முதிர்ந்த உள்ளங்கள் மணியத்தின் மறைவினால் '' இனி யார் எமக்கு '' என ஏங்கும் அவலத்தை காண்கிறோம்.

அதோ உற்றார் உறவினர் வீட்டுத் திருமண விழாக்களை மனியம் நடாத்தும் காட்சி பெரிய விருந்து வைபவங்களை நடத்தும் காட்சி எல்லாவற்றுக்கும் மேலாக தெல்லியூர் முத்துமாரி அம்பாள் ஆலயத் தொண்டனாகத் தோன்றி அன்னையை சுமக்கும் அடியனாக வரும் காட்சி, தேரடியில் நிற்கும் காட்சி ஒவ்வொன்றும் தோன்றித் தோன்றி மறைக்கின்றன. என்னே மாயையின் தத்துவம் அன்பர்க்கு அன்பன் நண்பர்க்கு நண்பன், தொண்டருள் தொண்டன், ஏழைகளின் இனிய தோழன் எடுத்ததை தொடுத்து முடிப்பவன். முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழிக்கோர் இலக்கியம் எங்கள் இனிய மணியம்.

வாழ்க மணியம் நாமம் - வளர்க அவன் பணி

ஓம் சக்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சித் தலைவர்

## திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின்

# அனுதாபச் செய்தி

திரு. மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் அவர்களின் ஆகால மரணம் கேட்டு ஆழ்ந்த கவலை கொள்ளாத அவரை அறிந்தோர் எவரும் இல்லை. எல்லோருடைய உள்ளத்தையும் தமது அன்பு, சேவை, பண்பு ஆகிய வற்ருல் கவர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் மிகக் குறுகிய காலத்தில் தான்பணிபுரியச் சென்ற நிந்தாவூர்ப்பகுதி மக்களின் உள்ளத்திலும் நிரந்தரமான இடத்தைப் பெற்ருர். தமிழ் இனத்தின் வாழ்விலும் நீங்காப் பற்றுக் கொண்ட அன்ஞரின் மறைவு எமக்குப் பேரிளப்பாகும். அவருடைய அன்பு மனைவிக்கும், அருமைக் குழந்தைகளுக்கும், குடும்பத்தவருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்கள். அமரர் சிவசுப்பிரமணியத்தின் ஆத்மா சாந்தியடைவதாக.

❋

# அஞ்சலி செலுத்துகின்ருேம்

தெல்லிப்பழை மக்களுக்கு அளப்பரிய சேவை செய்த மின்சார ஊழியராகிய மயில்வாகனம் சிவசுப்பிரமணியத்தின் ( மணியம் ) அகால மரணத்தையிட்டு தெல்லிப்பழை வர்த்தகர்கள் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்ருர்கள்.

**தெல்லிப்பழை வர்த்தகர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர்

## திரு. சி. சிவமகாராசா அவர்களின்

# அனுதாபச் செய்தி

நண்பர் சிவசுப்பிரமணியம் மறைந்துவிட்டார் என்ற செய்தியைத் தொலைபேசி மூலம் அறிந்து அதிர்ச்சியடைந்தேன். இத்துயரச்செய்தி எல்லோரையும் துக்கத்தில் ஆழ்த்தியது.

தெல்லிப்பழை கிழக்கு திரு. மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் அவர்களும் நானும் தெல்லிப்பழைக் கிராமாட்சி மன்றத்தில் ஒன்ருக வேலை செய்த காரணத்தால் மிக நெருக்கமாக பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவரை எல்லோரும் "மணியம்" என்றே அன்பாக அழைப்பார்கள்.

நண்பர் மணியம் தெல்லிப்பழைக் கிராமாட்சி மன்றத்தில் மின்சாரப்பகுதி ஊழியராக வேலை செய்தவர். மிக சுறுசுறுப்பாகக் கடமையாற்றி மேலதிகாரிகளினதும், பொது மக்களினதும் நல்மதிப்பைப் பெற்றிருந்தார். அவருடைய ஊக்கம், செயல் திறன், சேவை மனப்பான்மை அவருக்கு உத்தியோகத்தில் உயர்வைக் கொடுத்தது. அவர் தெல்லிப்பழைக் கிராமாட்சி மன்றத்தில் வேலை செய்த காலத்தில் செய்த சேவை என்றுமே மறக்க முடியாதலொன்ருகும்.

எமது விடுதலை இயக்கப்பணியிலும் நண்பர் மணியத்திற்கு நிறைந்த ஈடுபாடு இருந்து வந்தது. எல்லோரையும் தன்பக்கம் சேர்க்கின்ற பேச்சு ஆற்றல் வீரம் அவருக்கே ஒரு தனி மதிப்பைக் கொடுத்தது. அவருடைய மறைவு எமது இயக்கத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

கூட்டுறவுத்துறையிலும் நண்பர் மணியம் சேர்ந்து தொண்டாற்றினுர். எமது தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முதலாவது கிளையின் கிளைக்குழு உறுப்பினராகவும், பொதுச்சபைப் பிரதிநிதியாகவும் இருந்து சேவையாற்றினுர். அந்த வகையிலும் இவருடைய மறைவு எமக்கு ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாகும்.

பல துறைகளிலும் முன்னின்று உழைத்த நண்பர் மணியம் எம்மை கண்கலங்க வைத்து மறைந்து விட்டார். அவருடைய மறைவால் வாடும் அவருடைய அன்பு மனைவிக்கும், அருமைச் செல்வங்களுக்கும் உற்ருர், உறவினர்க்கும், எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடில்லாப் பேரருள்புரியும் தெல்லியம் பதியில் அமைந்த

முத்துமாரி அம்பிகையின்

## தேவஸ்தான தொண்டர் சபையின்

# அனுதாபச் செய்தி

அன்று தொடக்கம் இன்று வரைக்கும் எம் ஆலயத்தில் எவ்வமைப்புடைய உற்சவமாயினும் அஃது எக்காலத்தில் நிகழு மாயினும், அம்பாள் அருளால் தொண்டர் சபை என்ஞான்றும் தன் தவறில்லாத் தொண்டை ஆற்றிவந்தது இது வரை காலமும் தொண்டிற்கு எதுவித இடையூறும் நிகழவில்லை. எது எவ்வாறாயினும் 11-7-80 அன்று நாம் கேள்வியுற்ற செய்தி நம்பமுடியாதாயினும் முற்றிலும் உண்மையே. மறைந்த நம் மெய்த் தொண்டனும் மணியம் தன் தொண்டையும் வாழ்வையும் இடை நிறுத்தி மீளாது அம்பாளின் அடிகளை எய்து வாரென்று அவரோ அம்பிகையோ நமக்கறியத் தரவில்லை. கடந்த உற்சவத்தின்போது கூட நாட்டின் மிகுந்த தூரப் பகுதியாம் நிந்தவூருக்கு சேவையின் பொருட்டு மாறிச் சென்றும், தொண்டினை மறவாத் தொண்டுள்ளதால் அடியான் உற்சவ பத்து நாளும் அதன் முன்பும் பின்பும் தளராத உறுதியுடன் தனித்து முன்னின்று தேவியின் உற்சவ விழாவினை சிறப்புடன் செய்யும் தன்மையனுய் எல்லோரும் போற்றத் தொண்டாற்றினுர். எவ்வித உற்சவமாயினும் இப்படியாகத் தொண்டாற்றுவதற்கு மணியத்திற்கு நிகர் மணியமே! தூண்போல அவரமைய, அவரையே அம்பாள் தரும் பொற்கையாக்கி நாம் பின்சென்ருேம். இன்றுே அம்பாள் உண்டு. எம் பொற்கை இல்லை. அம்பாள் உற்சவகாலங்களில் அலங்காரமாக வீதியுலா வரும் போது வாகனத்தின் முன்கொம்பில் தனியனுக ஆண்சிங்கமாக அழகுற வீதியுலாக் கொண்டுவரும் காட்சியை தொண்டர்களாகிய எம்மாலோ அன்றில் அக்காட்சியை கண்ணுற்ற எவராலுமோ மறக்க முடியாதொன்று.

எமது ஆலயத்தின் தீர்த்த விழாவை மெய்த் தொண்டனும் மணியம் " திறம்பட நடாத்த வேண்டுமென பல உத்திகளை எமக்களித்து, அதை வருடா வருடம் திறம்பட செய்வதற்கு காரண கர்த்தாவாயிருந்தார். இப்படி தூய தொண்டால் எம்மையெல்லாம் ஆட்கொண்ட அடியாரின் அன்புள்ள மறியாத பாவி நேர் நின்று பொருதாது மறைந்து நின்று வஞ்சக முறையால் அவர் உயிர் பறித்தான். அந்நிலையிலும் அஞ்சாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாளை தன் நெஞ்சில் நினைத்து அம்பிகையே துணையென மீளாச்சுவர்க்கத்திற்கு நம்மையெல்லாம் தவிக்கவிட்டு அம்பாவின் பாதமலரில் நிரந்தர தீர்த்தமாடச் சென்றுவிட்டார். வைபவங்கள் இயற்ற இயலாது அவனுருவின்றி தவிக்கின்றோம். அம்பிகையும் சபையும் இருக்கும் வரைக்கும் அன்னாரின் தொண்டினையும் சேவையினையும் மறந்துவிட முடியாது. அவரது இளப்பால் துயருறும் அன்பு மனைவிக்கும் நான்கு சிறார்களுக்கும் அம்பிகையே அருள் பாலிக்க வேண்டுமென பிரிவால் தவிக்கும் நாம் அவள்பாத அடிபணிந்து வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

❀

# அணையா விளக்கு!

## திரு. பி. முகமட் அவர்கள்

(முகாமையாளர், நிந்தாவூர் ப. நோ. கூ. சங்கம்)

பார்ப்பதற்குப்
பயங்கரமானவன் நீ என்று
பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்
ஆனல்... உன்
அருமையான தங்கமான குணத்தை
என் போன்றவர்கள்
எப்படி மறக்க முடியும்!?
மணி
நீ மறைந்து விட்டாய், ஆனல்
குத்தப்பட்டு
குற்றுயிராய் ஓடிவந்து
என் பெயர் சொல்லி என்னைக்கட்டிப் [பிடித்தாயே!
அன்பின் திலகமே!
என் அருமை நண்பனே!
என்னைப் பொறுத்தவரை
என் இதயத்தின்
அணையா விளக்கு நீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை உள்ளூராட்சிப் பணி மனை
ஆய்வு உத்தியோகத்தர்

## திரு. தி. நாகேஸ்வரன் அவர்களின்

# அனுதாபச் செய்தி

### ஆயிரத்தில் ஒருவர்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தும்; நான் ஆற்றும் சேவையின்வாயிலாக தொடர்பிருந்தும்; திரு. சிவசுப் பிரமணியத்தோடு நெருங்கிப் பழகக் கிடைத்தது. அன்னாரின் இறுதிக்காலமாகிய எட்டு மாதங்களேயாகும். அன்னார் சேவை யில் உயர்வு பெற்று பணியாற்ற நிந்தாவூர் வந்துற்றார். அவ் வேளையில் பிறந்த மண் விட்டு, பொருள்தேட ஒன்றி விட்ட எம்முடன் அவரும் இணைந்தார். இதனால் நாம் நால்வர் நிந்தா வூரில் ஓர் மனையில், ஓர் குடும்பமாக, ஒருங்கிணைந்து, அயல வர் வியக்க வாழ்ந்தோம்.

வாழ்க்கைப் பாதையிலே நாம் பலரைக் காண்கின்றோம். ஆனால் ஓர் சிலர் எம் நினைவைவிட்டு என்றுமே அகல முடி யாத " ஆயிரத்தில் ஒருவர் " ஆகின்றனர். அன்னவர்களில் நண்பன் மணியமும் ஓர் அணையாத ஒளி. நெடி துயர்ந்த கட்டு மஸ்தான உடலமைப்புடன் பார்ப்பதற்கு பயங்கரத் தோற்ற மாக காட்சியளிப்பினும் பழகுவதற்கு மிக மிக இனியவர்.

நண்பர்களுக்கோர் நல் மாணிக்கம் " உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு " என்ற வள்ளு வரின் வாக்குக் கொப்ப, தன்னையோ, தன்னுயிரையோ கரு தாது இடுக்கண்கள் வந்துற்ற போழ்து, ஆற்றிய உதவிகள் இன் றும் அன்னாரை எண்ணி உவகை கொள்ள வைக்கின்றது.

இல்லறத்தோன் ஆற்றும் விருந்தோம்பலில் அவரும், அவர் தம் துணைவியரும் முன்மாதிரியாகத் திகழ்ந்தனர். அக முக மலர்ந்து, என், சுவை நாடி இறுதிக்காலத்தில் எனக்கு உண்டி அளித்த பாங்கு இன்றும் பசுமையாகவே என் அகத்துளது. நகைச் சுவையாகப் பேசி நண்பர்களை மகிழ்விப்பது மன்றி, இதிகாச இலக்கிய, கதைகளை தானே நடித்து எம்மை மகிழ்ச் சியில் திளைக்க வைப்பதில் மிக வல்லுநர். அன்னாரோடு சீட் டாட ஆரம்பித்தால் ( *Game of Cards* ) ஓர் தனி இன்பமாக அமைந்துவிடும். இவ்வண்ணம் கூறப்போகின் பல்கிப் பெருகும் நிகழ்ச்சிகள் பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்குவில் பிறரை எடைபோடக் கூடிய திறனும், மேலும் சகலருடனும் நன்றே, இனிதே பழகக்கூடிய ஆற்றலுமுடையவர். "ஓர் மயிர் நீப்பினும் உயிர்வாழாக் கவரிமான் போல்" மானத்தைப் பெரிதெனப்பேணினர்.

ரோசா மரத்தில் முள்ளிருப்பினும் அம் மரத்திலுள்ள மலரை விரும்புவது போல், அவர் கொண்ட வாழ்க்கையில் ஓர் சில குறைகள் இருந்தாலும், அவரில் காணப்பட்ட நற்குண விசயங்கள் விரும்பி ஏற்கக் கூடியனவாக அமைந்தது.

சகல வற்றிற்கும் மேலாக அவர் ஓர் சமூக நலத் தொண்டனாகவும், கோழைகள் மலிந்த எம் சமூகத்தில் ஓர் சுத்த வீரனாகவும் திகழ்ந்தார். அன்னாரின் தன்மான உணர்வும், அஞ்ஞா நெஞ்சமுமே, மாற்றாரின் வஞ்சகச் செயலால், எம்மிடையே இருந்து பிரித்தது என்றால் மிகையல்ல. வீரனுக்கு மரணம் ஓர் முறைதான். ஆயிரத்தில் ஒருவன் நீ.

அவரது மனைவி மக்கள் சிறப்புடன் வாழவேண்டும் என்றும், அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்றும், இறைவனை இறைஞ்சி இந்நல்வார்த்தைகளை இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி

## இளைஞர் அணிக்கு ஒரு மணி

**ம. சிதம்பரநாதன்** J. P. U. M.
சட்டத்தரணி

அமரர் மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் அனைவரின் பெரு மதிப்பைப் பெற்றவர். குறிப்பாக இளைஞர் அணியில் ஒரு மணியாகத் திகழ்ந்தவர். மணியம் என்று அழைத்து மகிழாத வர் கிடையாது. ஊருக்கு உழைத்த உத்தமர். அனேக ஆண்டு களாகத் தெல்லியூர் கிராமசபை யின் இணைப்பாளராகக் கடமையாற்றி திடமான ஒரு இடத்தை நிலை நாட்டியவர். எனது பதவிக்காலத்தில் சகல விஷயங்களிலும் என்னுடன் ஒத்துழைத்தவர். கம்பீரத் தோற்றத்தாலும் கல கலப்பான இனிய பேச்சாலும் அனைவரையும் கவர்ந்திருந்தார். என் உற வினராகையால் என் குடும்ப சுகதுக்கங்கள் அனைத்திலும் மிகுந்த பற்றும் பங்கும் கொண்டு இருந்தார். அவரது அமரத் துவம் எனக்கு ஒரு பேரிழப்பாகும். துடிப்பான இளைஞராகை யால் எதையும் மிடுக்காகச் செயலாற்றும் திறன் பெற்றிருந் தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் கோட்பாடு களுடன் மிகுந்த இரக்க சிந்தையுடையவர். ஆலய விழா, அய லவர் வீட்டு வைபவங்கள் சரி அழையாமல் நுழைந்து அனைத் தையும் தனித்து நின்று செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர். மாண்டவர் மீளுவரோ? அவர் பிரிவால் ஆறாத்துயர் கொண் டிருக்கும் அன்பு மனைவி, பிள்ளைகளை எவ்வாறு தேற்ற முடியும்? நல்லதொண்டனை நாடு இழந்து விட்டது.

அவர் ஆத்மா சாந்திக்கு நாமெல்லோரும்
பிரார்த்திப்போம்.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

நண்பன் திரு. த. தனராசா அவர்கள்
( ஆசிரியர், நிந்தாவூர் அல். அஷ்ரக் மகா வித்தியாலயம் )

செல்லக் கதைகள் மிகப்பேசிச்
சிரிக்க வைக்கும் மணியண்ணா
சொல்ல வொண்ணாத் துயர்தந்து
சேர்ந்த இடத்தைச் சொல்வாயோ?
பொல்லா யமனும் உனதுயிரைப்
பறிக்க அஞ்சி நடுங்குவனே
நிந்தா வூரில் நினதுயிரை
நீசன் ஒருவன் பறித்தானே. 1

விளையாட்டதனை வெகுநேரம்
விரும்பி நாமும் ஆடுகையில்
களைப்பைப் போக்கும் கதைகள்பல
கனிவாய்க் கூறும் வாயெங்கே?
சளையா தாடும் கரமெங்கே?
சலியா உள்ளந் தானெங்கே?
மூளைகள் நான்கும் வாடிடவே
முந்தி யெங்கு சென்றாயோ? 2

வஞ்சி யனைய வனிதையவள்
வாட்ட மறியா வாண்முகத்தாள்
வஞ்ச மற்ற உள்ளத்தாள்
வாஞ்சை மிகவும் உடையவளாய்
ரஞ்சி தனது மனஞ்சோர்ந்து
இரங்கி யேங்கித் துடித்திடவே
நஞ்சை நெஞ்சிற் பாய்ச்சினதோ?
நல்லாய்! உனது கதியிதுவோ? 3

அண்ணா வுன்றன் மணிமொழிகள்
ஆரா இன்பந் தந்திடுமே
கண்ணா முன்றன் மனைவியொடு
கனிநேர் மக்கள் இவர்தம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணு தெங்கு சென்றனையோ ?
எவர்க்கு மின்பந் தருமுடலம்
மண்ணுய் மாய்ந்து மடிந்தாலும்
மனதை விட்டு மறையாதே. 4

நிந்தா வூருக்கு நீவந்தாய்
நினைக்க வொண்ணுச் செயல்புரிந்தாய்
சிந்தை களிக்கநீ செய்தாய்
சிந்தை கலங்கச் சென்றிட்டாய்
புந்தி யில்லாப் புன்மனத்தோன்
புகுந்தே உயிரைக் குடித்தானே ?
அந்தோ ! இனிநாம் என்செய்வோம் ?
அண்ணு ! 'மணியே' வாராயோ ? 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உள்ளே வாழ்கிறாய் !

திரு. என். ராஜா அவர்கள்
நிந்தாவூர்

மணி ! என் அருமை நண்பா
மறைந்து விட்டாய் நீ !
மறக்க முடியாமல் தவிக்கின்றேன் நான் !
கட்டிய மனைவிக்கு
கனவில் கூடத் துரோகம்
செய்யக் கூடா தென
இடித்துரைக்கும் பண்பாளா !
எங்கு சென்று விட்டாய் !,
ஏங்கித்துடிக்குதே என்மனம் !

மனைவி என்றால்
உயிர் உனக்கு
மக்கள் என்றால்
அமிர்தம் உனக்கு
நண்பர்கள் என்றால்
இதயம் மலரும்
இன்பம் உனக்கு.

குத்தப்பட்டு
குற்றுயிராய் என்தோளில்
உயிரை விட்ட நீ
மறையவில்லை !
என் மூச்சுடன் மூச்சாக
என்னுள்ளே கலந்துவிட்டநீ
என்னைப் பொறுத்தவரை
சாகவில்லை !
என் உள்ளே வாழ்கிறாய் ! நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பிறந்த நாள் நீ மறைந்த நாள் !

திரு. சீ. சிவஞானசுந்தரம் அவர்கள்
( பிரதம லிகிதர் நிந்தாவூர் கிராமசபை )

நெடிந் துயர்ந்த தோற்றம்
நெஞ்சு நிமிர்ந்த பார்வை
ஆணழகா ! அருமை நண்பா,
பற்றிப்படர்ந்த பைங்கிளி,
பசுமையான
பச்சிளம் பாலகர்கள்,
சுற்றிப்படர்ந்த என் போன்றவர்கள்
எல்லாம் மறந்து
எப்படியப்பா போனுய் !?
ஏங்கித்தவிக்கும்
எனனிதயத்துக்கு
ஆறுதல் அளிக்க முடியவில்லையே !
மணி அண்ணு;
பச்சிளம் பாலகன் போன்ற உன்னை
பரிதவிக்க வைத்தனரே !
பண்பாளா !
என் பிறந்த நாள்
நீ மறைந்த நாளாகிவிட்டதே !
உன்னுடன் பழகிய
உன்னுடன் குதூகலித்த
பசுமையான நாட்கள்
என் இதயத்தில்
என்றும் நிறைந்திருக்கும் !
உன் ஆத்மசாந்திக்கு
என்றும் என்னுள்ளம்
பிரார்த்திக்கும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மணியண்ணன்

**திரு. பொ. சிவஞானசுந்தரம் அவர்கள்**
தொழில் நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்)
கிராமசபை, நிந்தாவூர்.

மனித வாழ்வு நீர்மேற் குமிழிபோல நிலையற்றது. இந்த உலகு நேற்று இருந்தவர் இன்று இல்லை என்ற பெருமை கொண்டது. உடலைப் பொறுத்தவரை இவை யாவும் நிலையான உண்மைகளே.

இந்த வகையில் நேற்றுவரை எம்மோடு வாழ்ந்து, தன் ஊனுடல் நீத்துவிட்ட போதிலும் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவம் பெற்றவரே.

ஒரு மனிதன் மறைந்துவிட்ட போதிலும், அவர் விட்டுச் சென்ற பண்பியல்புகள் உலகுக்கு, அவர் புகழைப் பரப்பிக் கொண்டே இருக்கும். '' மணியண்ணன் '' என்று நாம் மனதார அழைக்கும் அவர் தன் இனிய உள்ளத்தை எம்மோடு விட்டுச் சென்றிருக்கிறார். தன் உயர்ந்த பண்புகளை எமக்கு உறவாக்கியுள்ளார்.

ஒருவரை அவர் தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடக் கூடாது என்பது அறிஞர் தம் கருத்து. மணியண்ணனை நோக்கும்போது அவரது தோற்றம் முரட்டுச் சுபாவம் கொண்டவராக, அவரை எமக்குக் காட்டும். ஆனால் முள் நிறைந்த தோலினுள் மறைந்திருக்கும் பலாக்கனிச் சுவைபோல், அவர் உள்ளமும் இனியதே. அந்த இனிய இதயத்தோடு நான் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது, ஒன்பது மாதங்கள் மட்டுமே. அந்த ஒன்பது மாதங்களில் அவர் தம் உயர்ந்த உள்ளத்தை உணர்ந்து கொண்டேன். அவரை விட வயதில் குறைந்தவனான எனக்குத் தொழில் ரீதியிலே அவர் மதிப்பளிக்கத் தவறியதே இல்லை.

இளவயது, இனிய பண்பு, இதமாக எவரோடும் பழகும் ஏற்றமிகு இயல்பு கொண்ட அந்த உத்தமரை, பொல்லாக் கூற்றுவன் பொறுக்காது, மனைவியும், மக்களும், உற்றாரும் உறவினரும், நெஞ்சம் வேகி, வடிக்கின்ற கண்ணீர் வெள்ளத்திலே பறித்துவிட்டான்.

மனிதன் கடமையைச் செய்யாது உரிமைக்காக மட்டும் உரத்துக் குரலெழுப்பும் காலம் இது. மணியண்ணன் இந்த வகையில் மாறுபட்டவர். மறைந்து விட்ட எங்கள் மணியண்ணனைத் தொழில் ரீதியாக நன்கு புரிந்து கொண்டவன் நான். தனக்கிடப்பட்ட கடமையைத் தன்னம்பிக்கையோடு நிறைவேற்றி முடிக்கும் சேவை மனப்பான்மை கொண்டவர்.

இந்த உயர் குணங்கள் கொண்ட மணியண்ணை மறைந்து விட்டார். ஆனால் நம்பமுடியவில்லை. சுறு சுறுப்போடு பணியாற்றிய அவர் தோற்றம் என் மனக்கண்முன் நிழலாடுகின்றது. ஆம்! தாம் தொடர்பு கொண்ட அத்தனைபேர் நெஞ்சிலும் அவர் அழியாது வாழ்கிறார். வாழ்வார். அந்த அன்பு ஆன்மா ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது குடும்ப மாமணியே!

எங்கள் குடும்பத் தலைவனே!

என் அன்பு மச்சானே; உன்குடும்பத்தோடு என்குடும்பத்தையும்பார் என்று சொல்லி நீ பார்த்தாய் இன்னும் பார்ப்பாய் என்று கவலை கொள்ளாதிருக்குமுன் என் சொல்லை மறந்து என்னையும் ஏமாற்றிவிட்டுப்போக எப்படி மச்சான் மனம் வந்தது. அன்றும் நான் சவூதியால் வந்தவுடன் உன்னைக் காணாது என் மனத்தில் சந்தோஷமே இருக்கவில்லை. வந்ததுனை பாராது நிந்தாவூருக்கு ஓடோடி வந்தேனே. என்னைக் கண்டதும் கடவுளைக் கண்டவன் போல் அங்கும் இங்கும் ஓடி எனக்காக வேண்டியதெல்லாம் செய்தீரே; இனிய அடிசில் தந்து இனிதுரைகள் சொன்னீரே; அந்தோ உனக்கா இக்கதி நேர்ந்தது. நினைக்கவே முடியவில்லை. ஐயோ மச்சானே நான் பயணம் போகப்போகிறேன் என்று வந்து எனக்காக வேண்டியதெல்லாம் செய்து, பார்சல்கள் கட்டி புகைவண்டி நிலையத்தில் பகிடிகள் பல சொல்லி அனுப்பினீரே நீர் கட்டிய பார்சல்கள் அவிழ்க்கவில்லை, நீர் எங்குதான் போனீரோ! மச்சான், அன்று கார் ஓடப்போகிறேன் என்று கேட்டதும் கார் ஓடினால் பறவாயில்லை. ஆனால் உனக்கு வாகனங்கள் கூடாது. உனது ஓட்டத்திற்கு எலும்புகள்தான் பொறுக்க வேண்டும். ஆகவே வாகனங்களில் தொடாதே என்று கட்டுக்காவல் போட்டு வைக்க எந்தக் கொடூரமானவன் உன் உயிரைப் பறித்தான். ஐயையோ மச்சான் அன்று உன்னிடம் சொன்னேன், அத்திவாரம் போட்ட மாதிரி திறப்பையும் நீதான் வாங்கு என்றவுடன் நான் வாங்குவதென்றால் வீடுகுடிபுகுதல் அச்சுவேலி கிடுகிடுக்கச் செய்ய வேண்டும் என்றுயே; அதற்கும் ஓம் என்று தானே சொன்னேன். அச்சொல்லைக் கூட நிறைவேற்றி வைக்குமுன் எங்கே யப்பா ஓடி மறைந்தாய்! மச்சான் நீ இருக்கும் போது யாருக்கும் கிறுங்க மாட்டோம் என்று இருந்தோமே! இன்று அந்நினைவை எல்லாம் தவிடு பொடியாக்கிவிட்டு போய் விட்டீரே! ஐயோ மச்சான் அன்று பால் தப்பிய கைகளால் இன்று அரப்பெண்ணை வைக்க முடியாமல் செய்து உனக்குச் செய்ய வேண்டிய கடமையைச் சரிவரச் செய்ய முடியாமல் இவ்வளவு தூரத்தில் இருக்க விட்டு எங்குதான் போனீரோ! எங்கு போயினும் தில்லையிட்டி நாயகியின் ஆறுதல் என்றென்றும் இருக்க வேண்டுகிறேன்.

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து
உன் நினைவால் வாடும்

**மச்சான் சோபா (யோகராசா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குடும்ப குலவிளக்கே

தந்தைக்குத் தந்தையாய் இருந்த என் அத்தானே நீங்கள் தான் எங்கள் குலவிளக்கு என்றிருக்க இவ்வளவு பேரையும் ஏமாற்றிவிட்டு எவ்விடந்தான் போனீரோ? எந்தன் அத்தானே என்னைக் கண்டதும் சிறு குழந்தைபோல் அத்தான் என்று பாராது என்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்வீரே; ஐயகோ! நினைக்கவே நெஞ்சு வெடிக்குதே. என்றல் நம்பவே முடியவில்லையே. "மச்சான் டேய் வாடா நான் உனக்கு காணிவேல்மாதிரி கலியாணம் செய்து வைப்பேன்" என்று போட்ட கடிதம் என் கையில் கிடைக்குமுன் எங்கு தான் போனீரோ ஐயகோ! நீர் இருந்த சந்தோஷத்தைப் பொறுக்காமலா ஆண்டவன் உங்களைக் கூப்பிட்டுவிட்டான். எந்தன் அத்தானே! நீர் தந்தையாய், சகோதரமாய், மச்சாளுய் எம்குடும்பத் தலைவளுய் என்றும் இருப்பீர் என்று நாமெல்லாம் நினைக்க எம் நினைவை எல்லாம் சின்னு பின்னமாக்கிவிட்டு எவ்விடந்தான் போனீரோ; அத்தான் நீங்கள் சொல்லுவீங்களே முத்துக் குளிப்பவன் மச்சானிடம்தான் கயிற்றைக் கொடுத்துவிட்டு குளிப்பான் என்று. இப்போ உங்கள் கயிற்றை யாரிடம் கொடுத்துவிட்டுப் போனீர்கள். உன் தங்கை செல்லப் பிள்ளையடா நான் கஷ்டப்படுகிறேன் என்றீர்களே; இன்று என் தங்கைக்கும் பிள்ளைகளுக்கும் என்ன சொல்லிப் போனீர்கள்? அத்தான் இனியாவது பிறப்பு எடுத்து கஷ்டப்படாமல் கதிர்காமக் கந்தனடிசேர ஆண்டவனை வேண்டுகிறேன்.

இவ்வளவு தூரத்துக்கப்பால்
உங்கள் பிரிவுத்துயரால் வாடும்
**மச்சான் ஐயன் ( சுந்தரலிங்கம் )**

# எங்கள் இனிய உத்தமன்

**தம்பி மணியமே,**

உன் கள்ள மற்ற சிந்தையும், கபடமற்ற பார்வையும் கள்ளமில்லாச் சிரிப்பும் துள்ளித்திரியும் சுதந்திர சுபாவமும் நீர் அள்ளி வீசும் உன் கிள்ளை மொழியும் எங்கள் நெஞ்சைக் கிள்ளிக் கிள்ளிக் கொள்ளையிடும் வேளையில் இன்னுமொரு தடவை வந்து உன் அன்பான பகிடிகளையும் ஆதரவையும் பெறுவோமென்றிருக்க எந்தக் கொடும்பாவி உன் உயிரைப் பறித்தான்? உமது ஆத்மா சாந்தியடைய முருகப்பெருமானை வேண்டுகின்ருேம்.

உன் பிரிவாற்ருமையால் வாடும்
**சிங்கப்பூர் உறவினர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதல்வர்கள் இரங்கல்

**எங்கள் அருமை அப்பாவே,**

எங்கள் அன்பு அப்பாவே, 'இன்று எங்களை விட்டு எங்கு சென்றீர். ஐயோ எங்கள் அப்பாவே உங்களிடம் இன்றுவரை பேச்சுக்கேட்டறியோமே ! ஒரு அடி வாங்கியறியோமே ! எங்கள் அருமை அப்பாவே ! நாங்கள் சாப்பிடாது படியாது எக்குழப்படி செய்தாலும் அம்மா அடித்தால் உடனே நீங்கள் விடு என் பிள்ளைகளை என்றிழுத்து, சரி அழவேண்டாம். அப்பா இருக்கும் போது உங்களுக்கு என்ன பயம் என்று சொல்லி, ஏதும் இனிப்புவகை தந்து ஆற்றுவீரே. இனி நாங்கள் ஆரிடம் ஆறப்போகிறோம். உங்களைப்போல் இனி எங்களை யார் பார்ப்பார்கள் என்று விட்டுவிட்டுப் போனீர்கள். ஐயோ எங்கள் அப்பாவே அன்றும் அம்பாறையில் நடந்த பொருட்காட்சிக்குக் கூட்டிக்கொண்டு போய் தூக்கித் தூக்கி காட்டினீர்களே, பின்பு நீங்களும் வாங்கோ, அப்பதான் நாங்கள் போவோமென்று கேட்க: இல்லை நீங்கள் அப்பப்பா அம்மம்மாவோடு போய் நல்லாப் படியுங்கோ, நான் இரண்டு கிழமைகளில் வந்து கூட்டிக்கொண்டு போகிறேன் என்று சொன்னீர்களே, இன்று யார் அப்பா உங்களைக் கூட்டிக் கொண்டு போனது. ஐயோ எங்களால் மறக்கவே முடியாது. எங்களால் ஆறவும் முடியாது. இனி நாங்கள் யாரை நம்பி வாழப்போகிறோம்.

அன்புள்ள புதல்வர்கள்

**சித்திரா, கங்கேஜி, சுரேந்திரா, கஜேந்திரா**

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி இரங்கல்

எனதன்பு மணியண்ணுவே 10 ஆண்டுகள் முடிவடைந்தும் இதுவரை மணியண்ணு என்றே கூப்பிட்டேனே ! மணியண்ணு என்று கூப்பிடும்போது நீங்கள் அடையும் சந்தோஷம் என் கண்ணைவிட்டு மறையுமுன் எங்குதான் போனீர்களோ ? ஆ கடவுளே நீ ' குழந்தைப்பிள்ளை ' உனக்கு ஒன்றும் தெரியாது. சும்மாயிரு, நான் எல்லாம் செய்வேன் என்று சொன்னியளே இன்று இக் குழந்தையிடம் நான்கு சுமைகளையும் தந்து விட்டு எங்கு போனீர்களோ. ஐயோ என் மணியண்ணுவே சவூதிக்குப் போனாலும் உன்னை விட்டுப் போகமாட்டேன். என்று சொல்லுவீங்களே. இன்று நாற்பத்தெட்டு நாளாகக்கூட என்னைவிட்டுப் போக எப்படியப்பா மனம் வந்தது. அவசரம் அவசரம் என்று கலியாணம் செய்தீர்கள்; அவசரம் அவசரம் என்று வீடு கட்டினீர்கள்; அவசரம் அவசரம் என்று பிள்ளைகள் பெற்றீர்கள்; அவசரம் அவசரம் என்று வடிவாக வெளிக்கிடுத்திப் பார்க்க முடியாது; ஆறுதலாக வைத்துப் பார்க்க முடியாது; எங்களை மறந்து, எங்களைவிட்டுப் போனீர்கள். இனியும் அவசரப்படாது, இனி ஒரு பிறப்பு மெடாது இறைவனடி சேர வேண்டுகிறேன்.

## மனைவி புலம்பல்

வடிவழகா என்இனிய தலைவா அன்று
வையத்தே இல்வாழ்வுத் துணைவனுக
முடிவில்லாத் தவம்செய்தே பெற்றேன் ஆனல்
முடிவில்நான் சிறகிழந்த பறவை ஆனேன்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு போல
பிணைதூங்க நிழல் கொடுக்கும் மானேபோல
படிமீது வாழ்வளித்தாய் பரிதவிக்க
பறந்தெங்கே சென்ருய்சொல் அத்தான் அத்தான்.

## புத்திரர் புலம்பல்

அன்புக்குத் தந்தையாய் அறிவிற்குப் பெருஞ்சுடராய்
ஆற்றலில் சிறந்தவராய் இதயத்தில இனியவராய்
சித்திரா கங்கா சுரேன் கஜேன் என அன்பான நாமமிட்டு
விசித்திரமாய் நம்மையழைத்த அருமை அப்பாவே
பாசத்தின் ஒளிவிளக்காய் பாசமொழி தந்து
பரிவு பலகாட்டி நிறைவு பல செய்து
நில்லாமல் ஓடிவிட்டாய் கலங்கித் தவிக்கின்ருேம்
உன்பிரிவு வாட்டுதப்பா உன் நினைவால் வாடுகின்ருேம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையார், பெரியதத்தை, சிறிய தந்தைமார், தாய்மார், மாமனை, மாமி, மைத்துனி பிள்ளைகள் புலம்பல்

முன்னையஎம் தவத்தாலே மூதறிஞர் போற்ற
முத்தெனவே இவ்வுலகில் வந்துதித்த மணியே
அன்னையைநீ சிறுவயதில் இழந்திருந்த போதும்
அன்பாலே உளம்மகிழ நாம்வளர்த்தோம் அந்தோ
பின்னையநாள் நீகற்று பிறரேத்த வாழ்ந்த
பெருவாழ்வைக் கண்டு நாம் இறுமாந்த வேளை
பொன்னனையாய் விதியாலே நீஎம்மை விட்டே
போயினையோ விண்ணுடு யார்எம்மைப் பார்க்க.

## சகோதரர், சகோதரி, மைத்துனர், மைத்துனி பிள்ளைகள் புலம்பல்

அன்புடைய அண்ணுவே ஆசைக்கோர் நல்மருந்தே
ஐயகோ நாம்எல்லாம் ஏங்கித்தான் தவித்திடவே
முன்புநாம் செய்திட்ட பொல்லாத புண்ணியமோ
முடிவிலாத் துன்பமதை நீயளித்துச் சென்றிட்டாய்
கன்னல்மொழி பேசிடுவாய் காசினியோர் வாழ்த்துரைக்க
கதைகள்பல கூறிடுவாய் காண்போர்க்கு என்சொல்வோம்
இன்னல்கள் படவோநாம் இவ்வுலகில் தவித்திடவோ
ஏன்ஐயா பறந்திட்டாய் இனியெங்கே காண்பதுன்னை?

## மாமன், மாமிமார், சிறியதந்தை புலம்பல்

செங்கதிரோன் கீழ்வானில் தோன்றி ஒளி
சீடெனே பரப்பிடுவான் போலநீயும்
எங்களது குடும்பத்தில் புகுந்தே மூத்த
மருகன்என புதல்வன்என வைத்தாய் அந்தோ !
இங்கிதமாய் எம்மரிய புதல்வி யோடே
இல்லறமாம் நல்லறத்தை நடாத்தி வந்தாய்
திங்களது வானத்தை பிரிந்தால் என்ன
திக்கெட்டும் புகழ்பரப்பி மறைந்தாய் ஏனோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர், மைத்துனிகள், சகோதரன், சகோதரிகள் புலம்பல்

எமக்கினிய அத்தானாய் வாய்த்த எங்கள்
இன்னமுதே மணியண்ணா எங்கே சென்றாய் !
''உமக்கென்ன நானுள்ளேன் கவலை வேண்டாம்''
உயர்மழலைச் செல்வங்கள் எல்லாம் வாழ
நமக்குரிய கடமைகளை நானே செய்வேன்
நாள்முழுதும் உழைப்பேன் என்னக் காவுக்கு
சிமிக்கிடாது பலகதைகள் பகர்ந்தாய் இன்றோ
செயலற்று நாம்கதற வைத்தாய் ஐயா.

## மருமக்கள் புலம்பல்

அன்போடு எம்மை அழைத்து முகம்மலர்ந்த
இன்போடு இன்சுவை யூட்டி வளர்த்த
இன்சொற் கலந்துரை யாடி அகமகிழ்ந்த
பொன்போன்ற மாமாவை நாம் கண்டு களிக்க
கண்போன்ற மருமக்கள் ஏங்கித் தவிக்க
கொடிய கூற்றனின் வன்செயலுக்கு பழியானிரோ
கனியஉள்ளம் நாம்தவிக்க எங்கு சென்றீரோ !
இனியஒலி என்று கேட்போமோ ஐயகோ !
மணிஒலி ஓய்ந்தாலும் மின்ஒளி அணைந்தாலும்
மணிமாமாவின் தியாகஒளி எம்உள்ளத்தில் அணையாது

## உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் புலம்பல்

இவ்வுலகில் எமக்கரிய துணையொன் றுண்டு
எமைஅசைக்க வல்லார்யார் என்றிருந் தோமே
எவ்விதம்நாம் பொறுத்திடுவோம் அந்தோ சொல்நீ
எங்கேதான் சென்றாயோ மணியம் சொல்வாய்!

## குடிமக்கள் புலம்பல்

குற்றங் களையக் குணங்கொண்டு கோலோச்சும்
கோவேந் தன்போற் குடிமக்கள் குறைதனைச்
சற்றேனுஞ் சலியாது தாழ்வுயர்வு பாராது
தக்கவழி தான்தருந் தகவிலாத் தலைவா !
உற்ற துணையென ஊரவர் நலத்தில்
உற்சாகங் குன்றாது ஊருணியாய் நிற்கும்
வற்றாக் கருணையின் வள்ளலெம் துரையே !
வெற்றுடலை விட்டு விண்ணேறிச் சென்றதேனோ ?

## தேற்றம் (வெண்பா)

செய்வினை நுகரவந்த சீவனெல்லாம் ஈற்றில்
நெய்படு தீவண்ணன் நீழலாகும் — மெய்யில்லா
வாழ்வினை மெய்யென்று வாழுஞ் சீவன்காள் !
ஆழ்புவியி லத்தனையு மேன் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜப் பத்து

மண்ணாதிபூதமொடு விண்ணாதி அண்டம்நீ
மறைநான்கின் அடிமுடியும்நீ
மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ
மண்டல மிரண்டேழும்நீ
பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க்குயிரும்நீ
பிறவும்நீ ஒருவனீயே
பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ
பெற்றதாய் தந்தை நீயே
பொன்னும்நீ பொருளும்நீ இருளும்நீ ஒளியும்நீ
போதிக்க வந்தகுருநீ
புகழொணுக்கிரகங்கள் ஒன்பதுவும்நீ யிந்தப்
புவனங்கள் பெற்றவனும்நீ
எண்ணரிய ஜீவகோடிக ளீன்ற வப்பனே
என்குறைக ளார்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமிநேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 1

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கைசிவ காமியாட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
மறைந்த பிரம்மனாட
கோனாட வானுலகு கூட்டமெல் லாமாடக்
குஞ்சர முகத்தனாட
குண்டல மிரண்டாடத் தண்டைபுலி யுடையாடக்
குழந்தை முருகேசனாட
ஞானசம்பந்தரோடு இந்திரர் பதினெட்டுமுனி
யட்டபாலகரு மாட
நரைதும்புரு ஆட நந்திவாகனமாட
நாட்டியப் பெண்களாட
வினையோட உனைநாட எனைநாடி யிதுவேளை
விருதோடு ஆடிவருவாய்
ஈசனே சிவகாமிநேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 3

கடலென்ற புவிமீதில் அலையென்ற உருகொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கட்டுண்டு நித்தநித்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாமலிரவு பகலும்
உண்டுண்டுறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபய னடைந்திலனே
தடமென்ற மிடிகரையில் பந்தபாசங்களெனும்
தாபரப் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை இவ்வண்ணமாய்
இடையென்று கடைநின்று யேனென்றுதேடா
திருப்பதுன் னழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 3

பம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணந்
தம்பனம் வசியமல்ல
பாதான வஞ்சனம் பரகாய பிரவேச
மதுவல்ல ஜாலமல்ல
அம்பு குண்டுகள் விலக மொழியு மந்திரமல்ல
ஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
அரிய மோகனமுமல்ல
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெலாம்
கூறிடும் வைத்தியமல்ல
என்மனதுன் னடிவிட்டு நீங்காது நிலைநிற்க
யேதுவுள புகலவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 4

நொந்து வந்தேனென்று ஆயிரம் சொல்லியும்
செவியென்ன மந்தமுண்டோ
நுட்பநெறியறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ
சந்ததமும் தஞ்சமென்றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுகனறுமுகன் இருபிள்ளை யில்லையோ
தந்தை நீ மலடுதானோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தையும் ஞானமும் உன்னிடமிருக்குதே
வினையொன்று மறிகிலேனே
வேதமுஞ் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை யிதுவல்லவோ
இந்தவுலகீரேழு மேனளித்தாய் சொல்லும்
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 5

வழிகண்டு வுன்னடியைத் துதியாதபோதிலும்
வாஞ்சை யில்லாதபோதும்
வாலாயமாய்க் கோயில் சுற்றுதபோதிலும்
வஞ்சமே செய்த போதும்
மொழியே துகைமோனை யில்லாமலே பாடினும்
மூர்க்கனேன் முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
முழுகாமியே யாகினும்
பழியெனக் கல்லவே தாய்தந்தைக் கல்லவோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைவிக்குப் பாதியுடலீந்த நீ
பாலனைக் காக்கொணுதோ
ஏழிரண்டுபெரிய அண்டங்க ளடுக்காயமைத்த நீ
யென்குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 6

அன்னை தந்தைகளென்னை ஈன்றதற்கழுவனோ
அறிவிலாததற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக் கழுவனோ
முன்பிறப் பென்னவினை செய்தேனென் றழுவனோ
மூடவறிவுக் கழுவனோ
முன்பிணிகலென் வினைவந்து மூளுமென் றழுவனோ
முத்திவருமென் றுணர்வனோ
தன்னைநொந்தழுவனோ உன்னைநொந்தழுவனோ
தவமென்ன வென்றழுவனோ
தையலர்க்கழுவனோ மெய்வளர்ப்பதற் கழுவனோ
தரித்திர திசைக்கழுவனோ
இன்னமென்னப்பிறவி வருமோவென்றழுவனோ
எல்லாமுரைக் கவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயமுன் மரமீது பூபிஞ்சறுத்தனே
கன்னியர்கள் பழிகொண்டனே
கடனென்று பொருள்பறித்தே வயிறெரித்தனே
கிளைவழியில் முள்ளிட்டனே
தாயாருடன் பிறவிக் கென்னவினை செய்தனே
தந்தபொரு ளில்லையென்றனே
தானென்று கெர்வித்துக் கொலைகளவு செய்தனே
தபசிகளை யேசினேனே
வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனே
வாணரைப் பழித்திட்டனே
வடவுபோல பிறரைச் சேர்க்காதடித்தனே
வந்தபின் என்செய்தனே
ஈயாத லோபியென்றே பெயரெடுத்தனே
எல்லாம் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 8

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன
சேயர்களிலிருந்தென்ன குருவாய்த் திரிந்தென்ன
சீஷர்கள் இருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் நமனேலை
ஒன்றினைத்தான் தடுக்க
உதவுமோ யிவையெல்லாம் சந்தையுறவென்று தான்
உன்னிருபதம் பிடித்தேன்
யார்மீதில் உன்மனம் இருந்தாலும் உன்கடைக்
கண்பார்வை அதுபோதுமே
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 9

இன்னமும் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ
இது உனக்களகுதானே
என்னென்ன மோகமோ இதுவென்ன சோபமோ
இதுவேஉன் செய்கைதானே
இருபிள்ளை தாபமோ யார்மீதுகோபமோ
ஆனாலும் நான் விடுவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைவிட் டெங்குசென்றாலும் விழலாவனான்
உனையடுத்துங் கெடுவனோ
ஓகோவிதுன்குற்ற மொன்றுமிலை
யுற்றுப்பார் பெற்றவையா
என்குற்ற மாயினும் உன்குற்ற மாயினும்
இனியருளிக்க நினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 10

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்
குரு சந்திரன் சூரியனிவரைச்
சற்றெனக்குள்ளாக்கி ராசிபனி ரெண்டையும்
சமமாய் நிறுத்தி யுடனே
பனியொத்த நட்சத்திரங்க ளிருபத்தேழும்
பக்குவப்படுத்திப் பின்னால்
பகர்கின்ற கிரணங்கள் பதினொன்றையும்
வெட்டி பலரையும் அதட்டி என்முன்
கனிபோல வேபேசிக் கெடுநினைவு நினைக்கின்ற
கசடர்களை யுங்கசக்தி கர்த்தனின்
தொண்டராம் தொண்டர்க்குத் தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனாக்கி
இனியவள மருவுசிறு மணவைமுனி சாமியெனை
யாழ்வதினி யுன்கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 11

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எனது ஆருயிர்க் கணவரும் எங்கள் அருமைத் தந்தையாரும், குடும்பத் தலைவருமான அமரர் ம. சிவசுப்பிரமணியம் அவர்களது இறுதி வேளையில் உயிரை மீட்க உதவி அளித்தவர்களுக்கும், அவரது பூதவுடலை நிந்தாவூரில் இருந்து எமதூருக்கு கொண்டு வந்து சேர்க்க உதவி புரிந்தவர்களுக்கும், மரணச் சடங்கிலும், ஏனைய கிரியைக்கால வைபவங்களிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்த பெருமக்களுக்கும், பல பல வகையிலும் உதவி புரிந்தும் எமக்கு ஆறுதல் மொழி கூறி எம்மைத் தேற்றிய யாவர்க்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்
மனைவி, மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார ... நூலகம்
வகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org